2009 ஜூலை 21]

(அ) எடப்பாடியில் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): சேலம் மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தில் 10 டன் கொள்ளளவு உள்ள பால் பவுடர் தொழிற்சாலை செயல்பட்டு வருகிறது. எடப்பாடி பகுதியில், பால் பவுடர் தொழிற்சாலை அமைக்கப் போதுமான அளவிற்குப் பால் உற்பத்தி இல்லாததால் எடப்பாடி பகுதிக்கென தனியாக பால் பவுடர் தொழிற்சாலை அமைக்க வாய்ப்பில்லை.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) உறுப்பினர்கள் திரு. வை. சிவபுண்ணியம் மற்றும் செல்வி கே. பாலபாரதி ஆகியோர் மீதான உரிமை மீறல் பிரச்சினையைத் திரும்பப் பெறுவது குறித்த மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் காலையில் நான் சற்று தாமதமாக வர நேரிட்டதால், அதற்கு முன்பு இந்த அவையின் மாண்புமிகு உறுப்பினர்களான செல்வி கே. பாலபாரதி, திரு. வை. சிவபுண்ணியம் ஆகியோர்மீது, இந்த அவையிலே பேசுவதற்கு நேரம் ஒதுக்குவது குறித்து, மின்சாரத் துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் ஓர் உரிமைப் பிரச்சினையைக் கொடுத்து, அதனடிப்படையில் தங்கள் விளக்கத்தை அளிக்க அந்தக் கட்சியினர் அனுமதி கேட்டபோது,

அவை மரபுப்படியும், விதிகளின்படியும், தாங்கள் 'அனுமதிக்க இயலாது' என்று கூறிய நிலையில், அந்த இரண்டு கட்சிகளின் உறுப்பினர்களையும் அவையிலிருந்து வெளியேற்ற நேரிட்டது என்ற செய்தியினை அறிந்தேன். 'பேசுவதற்கு நேரம் கொடுக்கப்படவில்லை' என்ற குற்றச்சாட்டு, எந்தக் கட்சி ஆளுங்கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியிலே இருப்போர் பொதுவாகத் தெரிவிக்கின்ற ஒரு குற்றச்சாட்டு. அதனைப் பெரிதுபடுத்தி, அதுவும் கூட்டத் தொடர் முடியக்கூடிய நேரத்தில், ஓர் உரிமைப் பிரச்சினை வந்திருக்கத் தேவையில்லை என்பதுதான் என்னுடைய கருத்தாகும். ஆனாலும், பேரவைத் தலைவர் அவர்களைப் பற்றிக் குற்றஞ்சாட்டி வெளியே செய்தியாளர்களிடம் விமர்சனம் செய்ததாலும், முழக்கமிட்டதாலும், அந்த உரிமைப் பிரச்சினையைக் கொண்டுவர நேரிட்டுள்ளது என அறிய முடிகிறது. எனினும், இதுபோன்ற பிரச்சினைகள் கடந்த கால ஆட்சியிலே நேர்ந்தபோது, என்ன நிலை எடுக்கப்பட்டது என்பதற்கு உதாரணம் ஒன்றை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

7–11–2003 அன்று மாலை அரசு அலுவலர்களுக்கு எதிரான டெஸ்மா அவசரச் சட்டத்திற்குப் பதிலாக மசோதா கொண்டு வரப்பட்டு, அதன்மீது விவாதம் நடைபெற்று, மசோதா நிறைவேறியது. அதையடுத்து, பேரவைத் தலைவர் வெளியிட்ட அறிவிப்பில், "நான் முக்கியப் பிரச்சினையை எடுத்துக்கொள்ளப் போகிறேன். எனவே, சபைக்குள் இருக்கிற உறுப்பினர்கள், பத்திரிகையாளர்கள் சபைக்குள்ளிருந்து வெளியே போகாமலும், வெளியே உள்ளவர்கள் உள்ளே வராதவாறும் கதவுகளை மூடி வைத்துக் கவனித்துக்கொள்ளும்படி காவலர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இப்போது உரிமைக் குழு அறிக்கையைக் குழுத் தலைவரான துணை சபாநாயகர் அளிப்பார்" என்று அவைத் தலைவர் தெரிவித்தார்.

உடனே அப்போது துணை சபாநாயகராக இருந்தவர், தி.மு. கழக உறுப்பினராக அப்போதிருந்த திரு. பரிதி இளம்வழுதி மீதான உரிமைப் பிரச்சினை, 'இந்து' மற்றும் 'முரசொலி' நாளிதழ்களின் மீதான உரிமைப் பிரச்சினை குறித்த அறிக்கையை அவையிலே படித்து, அதனை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்றார். உடனே அப்போது எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. துரைமுருகன், 'இப்போதுதானே அறிக்கை தந்திருக்கிறீர்கள்; அதனை உடனடியாக எப்படி ஆய்வுக்கு எடுக்கமுடியும்? அதற்கு நாங்கள் திருத்தம் தரவேண்டும். இந்த அறிக்கையைப் படித்து, யோசித்து முடிவெடுக்க அவகாசம் தர வேண்டும்' என்றார். காங்கிரஸ், பா.ம.க.,

கம்யூனிஸ்டு கட்சிகளின் சார்பிலும் கால அவகாசம் வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டது. இதையெல்லாம் ஏற்றுக் கொள்ளாமல், அவை முன்னவரிடம் கூறி, தீர்மானத்தை முன்மொழியும்படி பேரவைத் தலைவர் அன்று கட்டளையிட்டார்.

அந்தத் தீர்மானத்தில் கழக உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதிக்கு 30 நாட்கள் சிறைத் தண்டனை வழங்கப் பரிந்துரை செய்யப்பட்டு, பலத்த எதிர்ப்புக்கிடையே, பேரவைத் தலைவர் அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக அறிவித்தார். தொடர்ந்து அவை முன்னவர் அவர்கள் மேற்கொண்டு தீர்மானங்களை முன்மொழிந்தார். அதில் 'இந்து' நாளிதழில் வெளிவந்த தலையங்கம், செய்திக் கட்டுரை, அன்றைய முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் கௌரவத்தைக் குலைக்கும் வகையில் அமைந்திருப்பதாகக் கூறியும், அந்தச் செய்தியை 'முரசொலி' நாளிதழில் எடுத்து, தமிழில் வெளியிட்டமைக்காகவும், 'இந்து' நாளிதழைச் சேர்ந்த 5 பேர் மற்றும் 'முரசொலி' ஆசிரியர் செல்வம் ஆகியோருக்கு 15 நாட்கள் சிறைத் தண்டனை விதித்தும், தீர்மானம் குரல் வாக்கின்மூலம் நிறைவேற்றப்பட்டதாகப் பேரவைத் தலைவர் அன்று அறிவித்தார்.

இன்னொரு முறை முரசொலி செல்வம் உரிமைப் பிரச்சினையில் சம்பந்தப்படுத்தப்பட்ட நிலையில், முரசொலி செல்வம் அவை நடுவே கூண்டிலே நிறுத்தப்பட்டார் என்பதும் இந்த அவையின் வரலாறு.

முற்பகல் 9–35

அவையிலிருந்து வெளியே வந்த பரிதி இளம்வழுதியைக் காவல் துறை கைது செய்து உடனடியாக இழுத்துச் சென்றது. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் எல்லாம் இங்கே நடைபெற்றது உண்டு. இதைச் சொல்வதன் காரணமாக, அப்படித்தான் இப்போதும் நடக்க வேண்டுமென்று அர்த்தமல்ல.

எப்படியோ, நடந்தது நடந்துவிட்டது; இனி நடப்பவை நல்லவையாக இருக்கட்டும் என்பதற்கேற்ப, தாங்கள் நேற்றையதினம் உரிமைக் குழுவிற்கு அனுப்பிய இந்தப் பிரச்சினையை ஆளுங்கட்சியின் சார்பாக அவை உறுப்பினர் திரு. வீராசாமியின் ஒப்புதலுடன் திரும்பப் பெற்றுக்கொள்கிறோம். தாங்களும் அண்ணா வழி நின்று பெருந்தன்மையோடு, அவை உரிமைக் குழுவிற்கு நேற்று அனுப்பிய பிரச்சினையைத் திரும்பப் பெற அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.